Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில்பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1. } 1910ஞு அக்டோபர்மீ 15உ. சாதாரணஞு புரட்டாசிமீ 29உ. { பகுதி 6.

ப. நாராயண அய்யர் B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர் B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

மதுரை.
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| குழந்தைகளுடன் நாம் பழகும் முறை — சிவராமசுப்பிரமணிய ஐயர் | ௧௬௭ |
| ஆகம சைவம்—என். பிச்சபிள்ளை | ௧௭௦ |
| பக்தி—கோபாலஸ்வாமிநாயுடு | ௧௭௮ |
| பகவத்கீதையும் கருமயோகமும்—அ. ரங்கஸ்வாமி ஐயர் | ௧௮௦ |
| சமாசாரம்—பத்திராதிபர். | ௧௮௫ |
| புத்தகவரவு—பத்திராதிபர். | |


---


# THE
## ORIENTAL PROGNOSTIC OBSERVATORY.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out!

We do not for a moment deny that there are plenty of imposters who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems. Asiatic and European. Struck by our ablities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO, writes to us,

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

I, SAMI PILLAI ST.,
Chulai Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1910ஸூ அக்டோபர்மீ 15உ. சாதாரணஸூ புரட்டாசிமீ 29உ. { பகுதி 6.

## * குழந்தைகளுடன் நாம் பழகும் முறை.

குழந்தைகள் ஈசுவரனான அகண்ட பெருஞ் சுடரினின்று உண்டான பொறிகளென்று அறியவேண்டும். அவர்கள் நம்மிடம் அடைக்கலமாக ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றார்களென உணரவேண்டும். அவர்களைக் கொடுமையாக நடத்தலும், அவர்களின்மேல் அதிகாரம் செலுத்தலும், அறிவீனம். அவர்களின்மேல் அன்புபாராட்டியும், அவர்களின்மேல் யுக்தமான ஆதரவுபுரிந்தும், குப்தமாயுள்ள தேவாத்மசக்திகள் மலர்ந்துவிகசிக்கும்படியாகவும், அவர்கள்நம்மிடம்ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றார்கள்எனஎண்ணுக. இவ்வுயர்வானஉத்தரவாதத்தைச் சிந்தனைகொண்டு நாம் அவர்கள்மேல் அதிக பட்சம் பாராட்டக்கடவோம். அவர்களுடன் பழகுவதில் எவ்விதத்திலும் கோபத்தைக்காட்டவுங்கூடாது. கோபங்கொள்ளவுங்கூடாது. கோபம் வெளியில் காட்டாமல் உள்ளேயே பொங்கிக்கொண்டிருக்கும்பட்சத்தில், கோப சிந்தனைகள் கொடுமையைச் செய்யும். நீர் நிலையில், ஒரு கல்லைப்போட்டால் எவ்விதம் அலைகள் பெருகிக்கொண்டே போகுமோ, அவ்விதம்கோபம் மந அலைகளைஉண்டாக்கும். அவ்வலை

* Adyar talks.

கள் குழந்தையின் மனத்தைத் தாக்கி தீமையை உண்டுபண்ணும். குழந்தையென்றால் இளம்பயிர். அதிக உஷ்ணமாயிருந்தால் வாடும். அதிகக் காற்றினால் ஒடியும். அதிகக் குளிரால் சக்தி குன்றும். அதுபோல குழந்தையும்இருக்கின்றது. இளம்பயிர்வளரவேண்டுமானால் எவ்வளவு கவலையும், பாதுகாப்பும்பற்றி நடக்கின்றோம். குழந்தையோஆயிரங்காலத்துப்பயிர் என்பார்அறிஞர். நம்முடையநன்மொழி, தீயமொழி,கோபமொழி,நல்லொழுக்கம்,தீயவொழுக்கம் இந்தஜன்மத்தில் மாத்திரம் இன்றி, இனிவரும் எத்தனையோ ஜன்மங்களில் குழந்தையின் நன்மை, தீமைக்குக் காரணமாக ஏற்படும்.குழந்தைகள் பரபரப்பாய் இருக்கும். விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதில் அதிகப் பிரியப்படும். பல கேள்விகள் கேட்கும். காரணகாரியங்களை மிகவும் அற்புதமாக நம்மை வினவும். நாம் அநேகங்களுக்குச் சரியானபடி விடைகொடுக்க முடியாமல்போம். அதனால் கோபங்கொள்ளுவோம். அதனால் சாவதானமாய் அவர்களைக் காப்பாற்றவேண்டும். அவர்களுடைய தவறுதல்கள், குற்றங்கள் முதலானவைகளை சகிக்கவேண்டும். அவர்கள் செய்கைகளில் அதிகப்பொறுமை பாராட்டவேண்டும். அவர்களுடைய வேலைக்காரர்களாக நம்மை மதிக்கவேண்டும். குழந்தைகளை நல்வழியில் நடத்தவும், அவர்களுடன் நேர்மையாய்ப் பழகவும் உள்ள பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்கமாட்டாது.

௨. குழந்தைகள் உலக விகாசமென்ற மஹா யாத்திரையில் ஜீவாத்மாக்களின் சரீரம் மட்டில், குழந்தைகளாவும், அறிவிலும், அனுபவத்திலும் நம்மைவிட முதிர்ந்தவர்களாகவும் இருக்கலாம் அன்றோ? சரீரத்தினால் நம்மைவிட பலஹீனர்களாகவும், பால்யராகவும் இருப்பதினால் அவர்களைக்கொடுமையாக நடத்தல் நியாயமன்று. நலமன்று. அப்படிச்செய்தால்நாம்பாவத்திற்கும்உள்ளாவோம்.நம் தோழனைப்போல் அவர்களை நடத்தல்வேண்டும். நம் தோழன் வேறொரு சொக்காயைப் போட்டுக்கொண்டு நம்மிடம் வந்தால் சொக்காயை உத்தேசித்து வேறு விதமாய் நடத்துகிறோமல்லோம். தோழனென்றே மதிக்கிறோம். தோழனென்றே அவனிடம்அன்புபாராட்டுகின்றோம். குழந்தைகளும் நமது சகோதரர்கள் ஆவார்கள். தோழர்களைப்போல அவர்களை நினைக்கற்பாலது. எப்போதும் அவர்களுக்கு நலம்பட அவர்களுடன் பழகவேண்டும்.

3. மேற்கண்ட விஷயத்தை உபாத்தியாயர் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது. இக்காலத்தில், சொற்ப சம்பளத்திற்காக வேலைசெய்யும் உபாத்தியாயரிடம் முக்கியமாக 20, 30, குழந்தைகள் உள்ள வகுப்பை நடத்துகின்ற உபாத்தியாயரிடம் நாம் அதிக அன்பையையும், பொறுமையையும், ஆதரவானஒழுக்கத்தையும்எதிர்பார்த்தல் நியாயமன்று. அதினுல், பெற்றோர்கள், அதிசஇளமைப்பிராயத்தில், குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புதல்அநுசிதம். நலமன்று. எழுவயதுவரை குழந்தைகளை நல்வழிப்படுத்தலில் பெற்றோர்கள் தாமேஉத்தரவாதத்தை வகிக்கவேண்டும். பெண்கள் பாடசாலைகளில் 5, 6, வயதுள்ள குழந்தைகளைச் சாதாரணமாகக் காண்கின்றோம். 7-வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைத் தான் ஆண் பிள்ளைகள், பெண்பிள்ளைகள் பாடசாலைகளிற் சேர்க்க அனுமதிசெய்யவேண்டும். அவ்வயசுக்குட்பட்டவர்களைத் தவிர்க்கவேண்டும். இதனுல் பெற்றோர்களை தங்கள் உத்தரவாதத்தை அலக்ஷியம் செய்யாமல், நடத்தும்படி தூண்டுவதாகும்.

சிவராமசுப்பிரமணியன்.

---

## நன்மொழி.

18. ஒருவன் மற்றவனை உள்ளபடி உண்மையாக அறிதல் இயலாது. அவன் கர்மத்தால் மதிக்கிறோம். அக்கர்மத்தின் காரணமான சிந்தனைகள் என்ன, சிந்தனைகளின் காரணமான ஆசைகள் என்ன, அவ்வாசைகளை தூண்டின விஷயங்கள் என்ன, அவ்விஷயங்கள் அவ்விதம் அவனை இழுக்கும்படி நேர்ந்த பூர்வ ஜன்ம வாசனைகள் என்ன, இவ்வித முடிவில்லாத காரணகாரிய பிரவாகத்தை அறிதல் லகுவானதன்று.

19. அறம் என்பது யாதெனில் பெற்றோரிடம் அன்பும், உடன்பிறந்தாரிடம் சகோதர பாவமும், தாம் இருக்கும் இல்லத்தில் சந்துஷ்டியும், சிநேகிதர்களிடம் நேசமும், அரசனிடம் பக்தியும், சோம்பலைத்தவிர்த்து சுறுசுறுப்பாய் இருத்தலும், சண்டை ஒழித்தலும், பொய்யை விலக்கி மெய் பேசுதலும், செய்த குற்றத்தை வெளியிடலும், பிறர் நோக ஏக்காரியமும் செய்யாதிருத்தலுமாம்.

# ஆகமசைவம்.

—:0:—

## சுத்தாத்துவைதசைவசித்தாந்தம்.

" ஏகன் அனேகன் இறைவனடிவாழ்க. "

1. உலகில் எக்காரியங்களைச் சாதிக்கினும், அவைகளுக்குத் தந்திரம் அல்லது சிறப்புவழி வேண்டுமென்பதை அனுபோகத்தில் கண்டிருக்கிறோம். எம். ஏ. பரீக்ஷைகொடுத்தாலும், உபாத்தியாயர் தொழிலைப் பெறுவதற்குப் போதனாசக்தி (சிறப்புப்) பரீக்ஷையிலும் தேறல்வேண்டுமல்லவா? அப்படியேமற்றத்தொழில்கள் ஒவ்வொன்றிலும் சிறப்பு யோக்கியதையைப் பெறவேண்டும். ஈசுவரனையும், தன்னையும், பிரபஞ்சத்தையும் அறிந்து ஈசுவரனை வழிபாடுசெய்துமுக்தி அடைவதற்கும் சிறப்புவழியுண்டு. அவ்வழியை வெளியிடுவதாய் உலகத்தில் அநேக மதங்கள்ஏற்பட்டிருக்கின்றன. நிரீசுவரவாத முள்பட எல்லாமதங்களும், நமது தேசத்தில் ஏற்பட்டிருக்கும் அநாதியான வேத வேதாந்தங்களில் அடங்கும். வேதாந்தத்திலும் போது இயல்பு அதாவது சாமான்னியமானவர்களும் அனுஷ்டிக்க வேண்டிய சாமான்னிய வழி ஒன்று. ஈசுவர பாவத்தை அல்லது ஐசுவரியத்தை அடைய தீவிரப்படுகிற முமுக்ஷுக்கள் அனுஷ்டிக்கக் கூடிய சிறப்புவழி அல்லது தந்திரம் என்ற சைவம் முதலிய உபர்வாகமங்களில் வெளியிடப்பட்ட மற்றொருவழி. இந்தப்பாகுபாட்டைஉத்தேசித்தன்றோ "தத்துவமஸி" "சிவோஹம்" என்னும் கடைப்பிடியான மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

2. சிலஸாமன்னிய தந்திரங்கள் உலகபோகங்களை அடையும் வழிகளைச் சொல்லும். அவைகளுக்குப்பொதுவாய் வாமமார்க்கமென்று பெயர். உயர்வாகமங்கள் அப்படியல்ல. ஈசுவரனை அடையச்செய்யும் தக்ஷிணமார்க்கத்தைப் போதிக்கும். இக்கலிகாலத்தில் இவ்வேறு பாட்டை விசாரித்து அறியாமல், நம்மவர்களில் அநேகர் எல்லா ஆகமங்களும் வாமமார்க்கத்துக்குரியனவென்றும், மதுமாம்சத்துடன் ரவுக்கை, ஒட்டியாணம் முதலிய ஆபரணங்களோடு கூடிய மோகினி அவதார வழிபாடென்றும் நிந்திக்கின்றனர். அது ஆராய்ச்சிக்குறைவேயாம்.

3. வேதாந்தத்தில் ஆத்மக்ஞானத்தையடைய பொதுலக்ஷணங்களைச் சொல்லும் இயல்பு ஒன்று. மேலே குறித்த வழி அல்லது தந்திரத்துடன் ஆத்மக்ஞானத்தைச் சிறப்பாகச் சொல்லும் பிரிவை சிறப்பியல்பு மற்றொன்று என்று சொல்லப்படும். சைவஆகமங்கள் வேதாந்தத்தின் சிறப்பியல்பையே போதிப்பதாக உரிமை பாராட்டுகின்றன. இச்சிறப்பு தந்திரவழியின் உண்மையானது, ரிஷிகள், மகான்கள், அல்லது சித்சக்தியினுடைய விசேஷண்ணியம் பெற்றால் அல்லதுவிளங்காது. வாதம் அல்லது தர்க்கம் இதில் உபயோகமில்லை.

4. ஆனால் ஒன்று கவனிக்கவேண்டும். அகிலமெல்லாம் பிரமமயம் அல்லது சிவமயம். அப்படியாகின், உலகத்தின் ஒவ்வொரு வஸ்துவும், மார்க்கமும் பொய்யோ, மெய்யோ, அநாதியே. பொய் என்றால் இல்லதல்ல, அடிக்கடி மாறுவதென்று தாத்பரியம். உண்மைத் தந்திரவழி (The path of Initiation) அதிக ரகசியமானது. பாத்திரமான ஆன்மாக்களுக்கே வெளிவிடப்படும். இந்த உண்மைத் தந்திரவழி சுத்த அத்துவைத சைவசித்தாந்தத்தில் ஏற்பட்டிருக்கிறது. வேதாந்தம் பொது இயல்பைச் சொல்லும். வெளிவந்திருக்கும் உபநிஷத்துகளில் சிறப்பியல்பை எதிர்பார்ப்பது அயுக்தம் போலும்.

5. இப்பொழுது சுத்தாத்துவைத சைவசித்தாந்தத்தின் பொது இயல்பு சாமான்யமாய்ச் சொல்லப்படும். பிரபஞ்சமெல்லாம் மூன்றுநிலையானபதார்த்தங்களில் அடங்கும். அவை (1) பதி, (2) பசு, (3) பாசம் என்பவையாம். அநாதியான சச்சிதானந்தமயத்தின் ஆனந்த அம்சத்தையே முக்கியமாகக்கொண்டு, சச்சிதாநந்த மயத்துக்குப் பாமசிவமென்றும், சச்சிதாநந்தரூபிக்குப் பரமசிவன் என்றும், இவை முதலிய பெயர்கள் வழங்கும். அவைகள் எல்லாம் பிரபஞ்சமும் சிருஷ்டி, ஸ்திதி, லயம் அடையுங்கால் அந்தந்த அவஸரத்தில், ஈசுவரனுடைய அருள் கிருத்தியங்களையநுசரித்து ஏற்பட்ட நாமங்கள். தாத்பரியத்தையே கிரஹிப்போம். பெயர்களைப்பற்றி மயங்கவேண்டுவதில்லை. பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துவதில், பரமசிவன் சங்கல்ப ரூபியாயிருக்கிறார். அவருடைய சக்திகள் சங்க

ல்பத்துக்குத்தக்கபடியாக தொழில்களை நடத்துகின்றன. சக்திகள் என்றால் என்ன? மந்திர திருஷ்டாக்களாகிய மஹரிஷிகள்தான் சாக்ஷாத்தாய் அறியக்கூடும். ஸ்தூலபிரபஞ்சத்திலிருக்கிற நம்மவரும் ஒருவாறாய் அறியலாம். தேகத்தில் தேகியாகிய ஆத்மா சங்கற்பித்த மாத்திரத்தில், நமது மூளை, முகம், ஹிருதயம், இந்திரியங்கள் முதலிய தேகசக்திகள் எப்படிக்காரியங்களை இயற்றுகின்றனவோ, அப்படியே நம்முடைய சிற்றறிவுக்கு அதிகமான கரணங்கள் ஈசுவரனுக்கும் உள்ளன என்று அறியத்தக்கது. அவைகளில் ஏவும் (சமவாய உயிர்) சக்திகள் 7. மூர்த்த (ரூபக) சக்திகள் 6. வேறுவகையில் ஆன்மாக்களை சமயத்துக்குத் தக்கபடி ஜனன மரண முதலிய விகாரங்களை உண்டுபண்ணி இயற்றும் சக்திகள் 3. இப்பதினாறு சக்திகளுக்குமேல் பரமசிவம் இருப்பர். இவைகளை சிவனுடைய சோடசகலைகளென்று சிவாகமங்களில் சொல்லப்படும்.

6. பதியை விவகரிக்கில்:—பிரபஞ்சத்தைக்காரியப்படுத்துகையில் அவர் சங்கற்பப்படி சக்திகள் நடத்தும் தொழில்களின்முறையாய், சக்தியோடுகூடியவெனத் தாத்பரியப்படும், சாதாக்கியம், சாதாக்கியமூர்த்தி பஞ்சசாதாக்கிய மூர்த்திகளெனப்படுவர்; சதாசிவர், மஹேசுவரர், ருத்ரர், விஷ்ணு, பிரம்மா என்பவர்களாம். இவர்கள் புவனங்களுக்கு காரணேசுவரர்கள்.

7. பசுக்களும் மூவகை:—பசுவென்றால் ஜீவன்முக்திவரையில் ஆன்மாக்களுக்கு ஏற்பட்ட இழிவு சிறப்புப்பெயர். மூவகைத் தென்பது (1) தேகமே தான் என்று அபிமானிக்கும் சகலர், (2) ஆன்மஞானம் கொஞ்சம் விளங்கி தேகத்தில் விரக்திமுற்றியிருக்கப்பட்ட பிரளயாகலர். (3) தேகத்தில் விரக்திமுற்றி ஆன்மஞ்ஞானம் அதிகமாய் அடைந்து முமுக்ஷுக்களாயிருக்கப்பட்ட விஞ்ஞானகலர். இப்படி மூன்றுவர்க்கங்கள் ஏற்படும். இவர்களுடைய ஞானத்திறத்தை அபிவிருத்திசெய்வதற்காக, பிரபஞ்சம் மன்வந்திரம்முதலியனவின் நிலைமைகள் தகைமைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

8. பாசம்:—பாசமாவது ஆன்மாக்களை மயக்கிக் கட்டுப்படுத்தும் பிரபஞ்சத்திற்கும், பிரபஞ்சத்தின் மயக்கசக்திகளுக்குப் ஏற்பட்ட பொதுப்பெயர். பிரபஞ்சத்தின் ஆகாரசக்திக்கு விந்துவென்

றும் கலை என்றும் மாயை என்றும் அவித்தை என்றும் மலம் என்றும் பலபெயர்கள் உண்டு. இவைகள் அவ்வியக்த சக்தியின் வெவ்வேறு தொழில்களைக்குறிப்பிடும் வேறுபாட்டுப்பெயர்கள் எனக்கொள்க. பொது வேதாந்தத்தில் ஸ்வபாவத், மூலப்ரகிருதி, பிரகிருதி, முதலியனப் பெயர்கள் வழங்குவன போலும்.

9. மேலேசொன்ன முத்தர ஆன்மாக்களின் மேல்கதிக்கு நமது பிரபஞ்சத்தின் ஒழுங்குகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன வென்று பார்ப்போம். சென்ற பிரளயத்தின் முடிவில், ஆன்மாக்கள் குடிலா சக்தியில் வித்து ரூபங்களாய் அடங்கியிருந்தன. ஆன்மாக்களின் தரத்துக்குத் தக்கபடி, மூன்றுவிதமாகப் பிரபஞ்சம் காரியப்படவேண்டியிருந்தது. பிரபஞ்சம் புதிதாய்த் தோன்றுதற்குமுன், தம்முடைய ஸ்வயநிலையமாகிய குடிலாசக்திக்கு அதிதமான குண்டலினி சக்தியில், சச்சிதாநந்த மயமாய் பரமசிவமிருந்ததெனப்படும். புதிதானதோற்றத்தைச்சங்கல்பித்தமாத்திரத்தில், சக்திகள் அதோமுகமாகி குடிலாசக்தியை க்ஷோபனம் (கலக்குதல்) செய்கின்றன. அப்போது பரமசிவத்துக்குப் பரசிவன் அல்லது லயசிவன் என்று பெயர். உண்டாகப்போகிற பிரபஞ்சத்தைத் தமக்குள் சங்கல்பித்து அடக்கிக்கொண்டிருந்ததினால் லயசிவனெனப்படுவர். க்ஷோபனம்*(கலக்குதல்) என்னும் கிரியையை விவேகிகள் கவனிக்கத்தக்கது கலக்கினீர் என்றால், ஆன்மாக்கள் இனி, அடையவேண்டிய குணம் சங்களை வித்துருபமாய் உபாதாநத்தில் வைத்தார் என்பதாம். சங்கல்பித்துக் குடிலாசக்தியில் அந்தர்யாமியாயும் பிரவேசித்தார். பிரவேசித்த காலத்தில் சதாசிவம் என்னும் மூர்த்தரூபம் பெறப்பட்டது. இதுதான் விந்துவும் நாதமும்கூடி, பிரபஞ்சத் தோற்றத்திற்கு ஆஸ்பதமான புத்திரனென்று, சொல்லத்தக்க சதாசிவர், மூர்த்தசாதாக்கியர், சக்திமான் என்று நினைக்கக்கூடியது.

10. இந்த அவஸரத்தைத்தான் பிரஹ்மஞான சங்கத்தார் (Theosophists) பிரகிருதிபுருஷதத்துவம்(Spirit Matter) என்றும், வைஷ்ணவர்கள் லக்ஷ்மிநாராயணன் என்றும், வேதாந்திகள் பிரகிருதி புருஷன் என்றும், சொல்லுவார்கள்போலும். இது சைவசித்

* (Spandana = "Vibration" of the Advaitins.)

தாந்தத்துக்கு மாறுபாடல்லவென்று ஆலோசிக்கத்தக்கது. வார்த்தைகள் மாத்திரையில் வேற்றுமை. இந்த அவலரத்திலிருந்து பஞ்சகிருத்திய ரூபசக்திகள் உண்டாகும். இந்த சக்திகள் தான் ஆன்மாக்களின் அந்தக்கரணம் பஹிர்க்கரணம் முதலிய சக்திகளுக்கும், சப்தம் முதலிய தன்மாத்திரைகளுக்கும், ஆகாசம்முதலிய பூதபௌதிகங்களுக்கும் மாதுருஸ்தானம். மூன்றுவிதப் பசுக்கள் அல்லது ஆன்மாக்களுக்கும் தக்கபடி மூன்றாதரமாகப் பிரபஞ்சம் விரிக்கப்பட்டது. சுத்தப்பிரபஞ்சம் விக்கியானகலருக்கும், சுத்தாசுத்தப்பிரபஞ்சம் பிரளயாகலருக்கும், அசுத்தப்பிரபஞ்சம் சகலருக்கும் ஏற்பட்டனவென்று கொள்ளுக.

11. பிரபஞ்சதோற்றத்தின் ஆரம்பத்தில், குடிலாசக்தியிலிருந்து அசுத்தமாயாபுவனத்தில் அசுத்த பூமியில் எந்தப்படிகளின் வழியாய் இறங்கிவந்திருக்கின்றோமென்று பார்ப்போம். பிரபஞ்சமானது சக்திமண்டலம், அக்கினிமண்டலம், சோமமண்டலம், சூரியமண்டலம் என நான்கு முக்கிய பகுப்புடையது. இப்போது நாம் இருப்பது சூரியமண்டலம். சூரியமண்டலத்திலும் 8-வது பூமியில் இருக்கிறோம். இதற்குக் காரணேசுவரர்கள் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்கள். 8-வது பூமியிலும் 4-வது துவீபத்தில் பாரதவர்ஷத்தில் (9 கண்டங்களில்) 9-வதான குமரிகண்டத்தில் வசிக்கின்றோம். பாரத வர்ஷத்தின் விசேஷம் என்னவென்றால், இது கர்மபூமி. இதில் சத்கருமங்களைச்செய்து ஆன்மஞ்ஞானத்தை விருத்திசெய்து கொள்ளத்தக்கது. ஜீவன் முக்தியை அடையலாம். ஆனால் இவ்வர்ஷத்தில் ஜனங்களுக்கு ஆயுஸ், தேஜஸ், பலம், அர்த்தம் இவைகளின் நிலைமைகள் யுகந்தோறும் மாறிக்கொண்டுவரும். ஆகையால் ஜனங்கள் சத்கருமங்கள் செய்வதில் எப்பொழுதும் விழிப்பாய் இருக்கவேண்டும். மற்ற வர்ஷங்கள் கர்மானுபவ பூமிகளாய்க்கிடக்கும். பாரத வர்ஷத்திலும் குமரிகண்டம் குருக்ஷேத்திரம் எனப்படும். இதற்கு வடக்கில் இமையமலைச் சார்பில் கைலாசம் இருப்பதென்பர். இது மஹா கைலாசமன்று. ஆனால் இது நாம் மஹாரிஷிகளென்று சொல்லத்தக்க ஜீவன்முக்தர்களிலும் பதம் ஏற்றப்பாடுடைய மகான்கள் இருக்குமிடம்போலும். இந்த அவரோஹணக்கிரமத்தில் (ஜீவன் இறங்கும் கிரமத்தில்) பிரவிர்த்திகதியில் அந்தந்தமண்டல

ங்கள், புவனங்கள், லோகங்களின் வழியாய் வரும்போது, அவைக ளின் தத்வாம்சங்களை வாஸனா ரூபமாய்க் கிரஹித்துக்கொண்டுவந்தி ருக்கின்றோம்.

12. இப்போது ஆரோஹணக்கிரமத்தில் அதாவது நிவிர்த்தி மார்க்கத்தை அடைந்து அதிலும் 5படி அல்லது கலை ஏறி யிருக்கி றோம். தேகத்தினுடையவும், அதின் வேறுபாடுகளுடையவும், ஆ சையினுடையவும், சுகதுக்கங்களினுடையவும், ஆன்மாவினுடைய வும், தன்மைகளை ஒருவாறு அறியத்தக்க அந்தக்கரணத்தை அடை ந்திருக்கின்றோம். அவரோஹணத்தில் பாரதவர்ஷத்தில் சண்டா ம்சு (கொடுமையான கிரணங்களுள்ள) சூரியனைப்போன்ற ரூபமாய் வந்தோம். பின்பு நாம் இருக்கும் இப்பூமியை அடைந்தபொழுது இப்பூமியைப்போல் அவித்யா ரூபமான க்ஷமா (தமஸ்) என்னும் நிலைமைக்கு உட்பட்டு, பூலோகசுகதுக்கங்களின் ரசத்தை உண்டு, ஜனனமரணங்களுக்கு உட்பட்டிருக்கிறோம். மிருத்யு (இயமனுடைய) வினுடைய அதிகாரத்தைத்தாண்டி மரணமில்லாத தன்மையை அடைய முயலவேண்டும். இந்த மார்க்கந்தான் வேதாந் தத்தின் சிறப்பு இயல்பாகிய சைவசித்தாந்தத்தில் போதிக்கப்படும்.

13. இச்சித்தாந்தம் எல்லையற்ற சம்சாரத்தின் கதியை தீக்ஷா க்கிரியையினால் முற்றுப்பெறச்செய்து, அனுப்தசக்தியை அடைந் து, சிவத்தில் அல்லது சச்சிதானந்த மயபிரமத்தில் நித்யநிரதிச யானந்தப் பேற்றைக்கொடுக்கும் * காரகம் அல்லது தீக்ஷை என் னும் அனாதியான உபதேசமெனப்படும். இது சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு படிந்தரப்படும். பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் கர்மயோகத்தை விசேஷமாய்க்கொண்டாடி இரு ப்பதற்கொப்ப, சைவசித்தாந்தத்திலும் கிரியையில் ஞானமார்க்கமே விசேஷமாய் இக்காலத்தில் பாவிக்கப்பட்டுவருகிறது. ஆனால் அப் பாவனையானது உயிராகிய உண்மையைஒழித்து பெரும்பாலும் சே ஷ்டாமாத்திரமான பயனற்ற நடிப்பாய் வழங்கி வருகிறது. இவ்வு பதேசமார்க்கத்தின் கருத்தை சுருக்கமாய்ச் சொல்லத்தக்கது. தேக ஆன்ம வேறுபாட்டை ஒருவாறு உணர்ந்து, இவ்வுலக அநித்திய

* The so.called " Razor-Path. "

சுகங்களில் வெறுப்புற்று, முமுக்ஷுக்களாய் இருக்கப்பெற்ற ஆன்மாக்களுக்கு இவ்வுபதேசம் கிடைக்கும். கிடைத்தால் பரமசிவன் அவ்வவர் அன்புத்திறத்திற்குத் தக்கபடிமானிட ரூபமாயோ அல்லது சத்ரூபமாயோ தோன்றி, அவர்களுடைய புண்ணிய பாபங்களை ஒரு க்ஷணத்தில் முற்றச்செய்து, உடனே ஆன்மா வேண்டியபடி அபரமுக்தியையாவது அல்லது பதமுக்தியையாவது அளிப்பர்.

14. அபரமுக்தி என்பது சத்தியோமுக்தி என்றும் சொல்லப்படும். ஸாங்கிய மதத்தில் சொல்லிய பிரகிருதி லயமும், இதில் அடங்கும்போலும்.

பதமுக்தியாவது உடனே பரமுக்தியல்ல. பக்குவ ஆன்மாவை க்ஷணகாலத்தில் அநேக ஜன்மங்களை எடுக்கச்செய்து, ஆர்ஜித புண்ணிய பாவங்களை போக்குவதுமல்லாமல், ஆர்ஜிக்கவேண்டிய அநுபவங்களுக்குத்தக்க ஜன்மங்களிலேவி, அவ்வநுபவங்களை அடையச் செய்து, மறுபடியும், பதங்களில் ஜன்மம் எடுக்கும்பொழுது, மாயைக்கு உட்படாமலிருக்கும் பொருட்டு, மாயா கர்மவாசனைகளையும்போக்கி, சுத்த ஆன்மாவாகச் செய்வதே. இவ்வான்மா மறுபடியும் ஜன்மம் எடுத்து, லோக உபகாரத்திற்காக ஒவ்வொரு பதத்தை அடைந்து, அதில் ஜீவகாருண்ணிய வேலைகளைச் செய்வான். நாரதர் ஜலத்தில் சிரசை ஒருதரம் அமிழ்த்தி எடுப்பதற்குமுன், அவரைப் பல ஜன்மாந்தராநுபவங்களையும், மகாவிஷ்ணு பகவான் அடையச்செய்தாரென்பதையும், இம்மாதிரி பிறதிருஷ்டாந்தங்களையும் நாம் புராணங்களில் பார்த்திருக்கிறோம். மேலும் ஸ்வப்பனத்தில் சில நிமிஷங்களில் பல காரியங்களைச் செய்கிறதாகத் தோன்றுகிறது. குரு முகூர்த்தமாய்வரும் ஈசுவரன் நாம் ஒரு க்ஷணமென்று நினைக்கும் காலத்தில் எவ்வளவு காரியந்தான் செய்யமாட்டார்?

15. ஆண்டான் அடிமை என்பது*சித்தாந்தசைவத்தின் முக்கிய கொள்கை. ஆன்மா ஈசுவரனுடைய உடைமை. ஆன்மா பதம் ஏற ஏற, அடிமைத்தொழிலும் அதிகரிக்கும். இந்தசுத்தஆகமமார்க்கத்தில், பிரசாத மந்திரஉபாசனை வேண்டும். அம்மந்திர உபதேசத்

* Self-Surrender.

தை, ஞானசாரியர் தோன்ற அவர் மூலமாய் அடைந்து, உபாசனை செய்யிற்றான் அது பிரயோஜனப்படும்.

16. இவ்வுலகத்தில் சிலவருஷங்களாய் தியசாபிக்கல் சொசைட்டி யென்னும் சங்கம் பரவி வருகிறது. அந்தச்சங்கத்தின் முக்கிய கொள்கையும் ஆண்டான் அடிமை என்னும்லோக உபகாரமே காரிய மென (Service to humanity) வற்புறுத்துகிறது. இவ்வுண்மைக் கேற்ப, நமதுமாதாவாகிய இந்தியாவின் நன்மையின் பொருட்டு இச்சங்கத்தில் சேர்ந்த அநேகர் ஐரோப்பியர்களும் சுதேசிகளும் தேகப்ரயாசைப் பட்டும், சொந்ததிரவியத்தைச் செலவிட்டும், ஆண்டான் அடிமைத்திறத்தில் பாடுபட்டு வருகிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் அந்தச்சங்கம் சைவ சித்தாந்த ஆசாரியர்கள் அல்லது மஹரிஷிகளின் ஆதரவை யுடைய தென்றே கொள்ள வேண்டும். பிரசாத மந்திர உபாசனையும் உண்டு. இச்சபைக்கு மஹான்களின் அநுக்கிரகமும் உண்டு.

ஸர்வ ஜனங்களும் ஸுகிகளாகுக.

என். பிச்சபிள்ளை. (வேதாரண்ணியம்.)

---

## நன்மொழி.

---

20. நடுநிலைமையுள்ள சத்தியம் ஜன சமூகத்தில் நேர்மையையும், ஒப்புரவையும் உண்டாக்கும். ஐக்கியத்தையும், கூட்டுறவையும், அவைகளால் நிகழும் பொதுக் கைங்கரியத்தையும் உண்டு பண்ணும். அசத்தியமோ இவை எல்லாவற்றையும் கெடுக்கும். அதனால், தேசத்தின் வலிமை குன்றும். க்ஷேமக்குறைவு நேரிடும்.

21. எல்லாச் செயலையும் நலம்பயக்குமாறு, செய்வாய். உலகத்தில், காரியகாரண சம்பந்தத்தைப்பார்த்தாயாகில், எல்லாம் அன்பையும் சத்தியத்தையும் நாடியே நடைபெறுகின்றன என்று அறிவாய்.

# *பக்தி.

1. பக்தி என்பது தமிழில் பத்தியெனச் சொல்வர். பக்தி, அன்பு, காதல் என்பன ஒரு பொருட் சொற்கள். பத்தி என்பது பற்றுதல் என்னும் பொருளமைந்த ஒரு சொல்லாம். பற்றுதல் என்னுமிடத்துப் பற்றப்படுவதற்கு ஒருபொருளும், பற்றுவதற் கொரு பொருளும், பற்றுதலாகிய ஒரு தொழிலும்வேண்டப்படுவன. இவற்றை முறையே விசாரிப்பாம். பற்றுதல் என்பது தன்னொடுதொடர்புடையாரிடத்து நிகழும் உள்ளக்கிளர்ச்சியாம். தான் என்னும் சொல்லுக்குத் தேகமே பொருளாகக் கொண்டு அதன் சம்பந்தமான மனை மக்கள் தன தான்யாதிகளாகிய பிரபஞ்சப் பொருள் ஒன்றும், அத் தான் என்னும் சொல்லுக்கு ஜீவாத்மாவைப் பொருளாகக் கொண்டு அதன் சம்பந்தமான பரமாத்மா ஒன்றும், ஆகப்பற்றப்படும் பொருள்கள் இரண்டாம். பற்றும் பொருள் ஜீவன். பற்றுதல் செய்வதற்குக் கருவியாயுள்ளது உள்ளம் அல்லது மனம். ஆகவே, ஜீவாத்மா மனத்தைக்கருவியாகக் கொண்டு பிரபஞ்சப் பொருளினிடத்தும், பரமாத்மா விடத்தும், பற்றுதலைச் செய்வதற்குப் பத்தியென்று சொல்லப்பெறும்.

2. இப்பத்தி பாசவிஷயமாகிய பிரபஞ்சப்பொருளைப் பற்றுகையால் "மாறிமாறிப் பல்பிறப்பும் பிறந்துஞ்செத்தும்" என்றபடி, பிறந்திறந் துழலுவதாகிய "துக்கச் சுழலையிற் சூழ்ந்துகிடந்தவலை" என்னலாம்படியான துன்பமும், பரமான்மாவைப் பற்றுகையால் அத்துன்பங்களினின்று நீங்கி "அந்தமில் பேரின்ப" மான நித்யானந்தப் பெருவாழ்வைப் பெறுவதும் பயனும். ஆதலால்,

"பிறந்தேன் பெற்ற மக்கள் பெண்டி ரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன் நீபணித்த அருளென்றும் ஒள்வாளுருவி
எறிந்தேன் ஐம்புலன்களி னிடர்தீர எறிந்துவந்து
செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர மேயவனே".

---

* இஃது ஹரித்துவாரமங்கலம் கோபாலவிலாச பிர்ஹ்மஞான சங்கத்தின் முதலாவது வருஷ மகோற்சவத்தில் சாலியமங்கலம் போஸ்மாஸ்டர் டி. வி. கோபாலசாமிநாயுடுவால் வாசிக்கப்பெற்றது.

என நம் ஆழ்வா ரருளியபடி பிரபஞ்ச விஷயத்தில் பற்றுதலைத் துறந்து "துறந்தமையால் சிறந்தேன் நின்னடிக்கே அடிமை" என்றபடி பரமாத்மா விடத்தில் பற்றுதலைச் செய்ய முயலவேண்டும்.

3. நல்லொழுக்கம், தீயொழுக்கம், கூடாவொழுக்கம், எனஒழுக்கம் பலவகைபாயினும், அடைகொடாது ஒழுக்கம்என்று கூறுதலினனே நல்லொழுக்கம் ஒன்றனையே குறிப்பிப்பது போல, ஈண்டு அடையின்றிக் கூறும் பத்தி என்னும் சொல்லுக்குப் பரமாத்மாவிடத்துப் பத்திசெய்வதாகிய ஈசுவர பத்தியையே பொருளாகக் குறிக்கும். இந்த ஈசுவரபத்தியில் உறைந்து நிற்பதினுற்றுன், அநாதியாக பல ஜன்மங்களில் தொடர்ந்து வரும் பாசப்பற்று நீங்கவேண்டும். இதுபற்றியே

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

எனத் தெய்வப்புலவர் திருவாய் மலர்ந்தருளியதென்க. இப் பாசப்பற்று நீங்கவே பிறப்பற்று வீடு பேறுகும். இதனை "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" "அற்றது பற்றெனில் உற்றது வீடே" என்னும் முதுமொழிகளினுனறிக.

4. உலகில், ஒருவர் மற்றொருவரிடத்துப்பற்றுவைக்குங்கால், அவருக்கும் இவரிடத்துப் பரஸ்பரம் பற்றுண்டாவது இயல்பே. அங்ஙன முண்டாகாதிருக்குமாயின் அவரை யாரும் மதியுடையாரென மதியார். இதுபோலவே எல்லாம் வல்ல பேரறிவுடைய ஈசுவரனிடத்துப் பற்று அல்லது பத்திவைக்குங்கால் அவரும் நம்மிடத்துப் பத்திவையாதிரார். ஆனால் நாம் அவரிடத்து வைக்கும் பத்திக்கும், அவர் நம்மிடத்து வைக்கும் பத்திக்கும் வித்யாசமுண்டு. யாங்ஙனமெனில், கூறுதும், நாம் அவரிடத்து வைக்கும் பத்திக்கு அன்பு என்றும், ஈசுவரன் நம்மிடத்து வைக்கும்பத்திக்கு அருள்என்றும் பெயராம். இன்னும் இதன் உண்மைபைக் கூறுமிடத்துத் தாழ்ந்தோர் உயர்ந்தோரிடத்துவைக்கும் பத்திக்கு அன்பு என்றும், உயர்ந்தோர் தாழ்ந்தோரிடத்துவைக்கும் பத்திக்கு, அருள் என்றும் சொல்லப்பெறும். இதனை "அருளொடு மன்பொடும் வாராப் பொ

றுளாக்கம் புல்லார் புரள விடல்" என்னும் திருக்குறளுக்கு, உரையாசிரியர் உரை கூறுமிடத்து, அருளோடும் என்னும் பதத்திற்கு அரசன் குடிகளிடத்து வைக்கும் பத்தியையும், அன்பொடும் என்னும் பதத்திற்கு குடிகள் அரசனிடத்து வைக்கும் பத்தியையும் பொருளாகக்கூறி வலியுறுத்தினமைகாண்க.

இங்ஙனம் கூறியவாற்றால் பத்தியென்பதும் அன்பு என்பதும் ஒரு பொருள் பயப்பனவாயிருப்பினும், ஈசுவரனிடத்தில்உலக விருத்தியோடு கூடி நின்ற நிலைக்குப் பத்தியெனறும், விருத்தி இறந்த நிலைக்கு அன்பு என்றும் அனுபவம் முதிர்ந்த ஆன்றோர் கூறுவர். இவற்றுள் பத்தி விருத்தியோடு கூடினதென்பதை "முத்திநெறியறியாதமூர்க்கரொடு முயல்வேனை, பத்திநெறியறிவித்து" என்றும், அன்பு விருத்தி இறந்தநிலையென்பதனை "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்றும் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும் "அன்பாவாய் ஆரமுதமாவாய் அடியேனுக் கின்பாவாய் எல்லாமும் நீயாவாய்' "ஆராவமுதே அடியேனுடலம் நின்பா லன்பாயே நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே" என ஆழ்வாரும் திருவாய் மலர்ந்தருளினமைகாண்க.

5. இனி இப்பத்தியின் படிகள் எண்வகையாகவும், அன்பு ஒன்றாகவும் ஆக ஒன்பது வகையாகக் கூறுவர்.

பத்தியின் எண்வகைப் படிகளாவன.

1. சிரவணம். 2 கீர்த்தனம். 3 ஸ்மரணம். 4 சேவனம். 5 அர்ச்சனம். 6 வந்தனம். 7 தாஸத்வம். 8 சிநேகத்வம்.

(1). இவற்றுள் சிரவணமாவது: ஈசுவரனுடைய அனந்த கல்யாணகுண கணங்களை ஆன்றோர் முசமாக அறிந்து மகிழ்தல்.

(2). கீர்த்தனமாவது: அத்தகைய கல்யாண குணங்களை இடைவிடாமல் துதித்துப் பாடியாடி அனலிலிட்ட வெண்ணெய்போல உள்ளம் நெக்கு நெக்குருகிக் கரைந்து நிற்றல்.

(3). ஸ்மரணம்: புறக்கரண வியாபாரமின்றி அகக்கரணங்களினால் "என்னரங்கத் தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில் எழுகமலப் பூவழகர்" என்றபடி ஈசுவரனுடைய அப்

ராகிருத தேஜோமய திவ்யமங்கள விக்ரஹ சௌந்தர்ய சௌலப்யத்தில் ஈடுபட்டு உருகிக் கசிந்து தியானித்து நிற்றல்.

(4). சேவனம்: ஈசுவரனுக் குவப்பாகப் பூமாலைதொடுத்தல், நந்தவனம் வைத்துப் பாதுகாத்தால், ஆலயங்களிலே "கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே" என்றபடி, சீத்தல், திருமெழுகிடல், கோலமிடுதல், முதலிய கைங்கர்யங்களைச் செய்தல்.

(5). அர்ச்சனமாவது: மந்த்ர பூர்வகமாக "மாயவன்றன்னைவணங்கவைத்த கரணமிவை" என்றபடி புறக்கரணங்களினாலும் அகக்கரணங்களினாலும் "நாடாத மலர்நாடி நாடோறும் நாரணன்றன் மலரடிக்கீழ்" என்றபடி மலரினாலும் பாவனையாலும் அர்ச்சித்தல்.

(6). வந்தனமாவது:புறக்கரணங்களினால் சாஷ்டாங்கமாதிவந்தனம்செய்தல்

(7). தாஸ்யத்வம்:கர்மவசத்தால் தான்செய்யும் செயல்களையும், தனக்குப் பிறர்செய்யும் செயல்களையும், செய்யும் சுதந்தரம் தனக்கும்பிறர்க்கும் இல்லையென்றும், அச்சுதந்தரமுடைய எம்பெருமான் திருவருளானே அவை நிகழ்வதென்றும், தன்னறிவிற் கண்டு பாரதந்திரியவிருத்தியிலிருந்து, ஈசுவரனுக்குவப்பாய் அடிமை செய்தல்.

(8). சினேகத்வம்: "அன்பீனு மார்வமுடைமை யதுவீனும் நண்பென்னு நாடாச்சிறப்பு" என்னும் திருக்குறளின்படி அன்பினாலே ஈசுவரனிடத்துப் பிரேமமுண்டாகி, அதனால் நட்புப்பாவனை முதிர்ந்து, நட்பிற்குரிய சிறந்த குணங்களுள் தன்குறைகளையெல்லாம் மறையாதுகூறி, பரஸ்பரம் நட்பாமுரிமை கொண்டு மகிழ்தலும், ஈஸ்வரநிந்தை கேட்ட விடத்துச் சகியாமையுமாம்.

6. இனிஅன்புவகை ஒன்று ஆத்மநிவேதனமாம். ஆத்மநிவேதனமாவது:மேற்கூறிய வழிபாடுகளையியற்றிக் கன்மபாசத்தின் வலிமைகுன்றித் திருவருள் வியாபிக்கப்பெற்று, அத்திருவருளே துணையாக அவ்வருளோடு பிரிப்பின்றி நிற்கும். இறைவனிடத்துஅவன்வேறு தான்வேறெனும் பேதமற "ஊனொட்டி நின்றென் உயிரிற்கலந்து" என்றும்,

'தானும் யானும்எல்லாம்தன்னுள்ளேகலந்தொழிந்தோம்' என்றும்,

"எனதாவி யுள்கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனிமீள்வ தென்பதுண்டே
எனதாவி யாவியும் நீ பொழிலேழு முண்ட வெந்தாய்
எனதாவி யார்யானுர் தந்தநீகொண் டாக்கினையே" என்றும்,

நம்பரமகாருணிகரான நம்மாழ்வாரருளியபடி ஜீவபோதம் சிறிதும் எழாமல் அறப்பேரானந்தப் பெருங்கடலில் அமிழ்ந்து நிற்றலாம்.

இங்ஙனம் நிற்குங்கால் தொடக்கத்தில் தானும், தலைவனும், தான் தலைவனைக்கூடுதலாகிய தொழிலும், காணப்படினும், முடிவில் வேற்றுமை ஒன்றும் காணப்படாததாயும், அவ்வேற்றுமைக்குரிய பொருள்கள் இல்லையென்று சொல்லமுடியாததாயும், அருள்மயமாய் நிற்கும். இந்நிலைமையைத்தான்

"தானான தன்மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாது
தலைப்பட் டாங்கே
போனாலும் கர்ப்பூர தீபம் போலப் போயொளிப்ப தல்லாது
புலம்வே றின்றாம்
ஞானக ரத்தினொடு ஞேய மற்ற ஞாதுருவும் நழுவாமல்
நழுவி நிற்கும்
ஆனாலும் இதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்"

என்று ஸ்ரீதாயுமானஸ்வாமிகளும் திருவாய் மலர்ந்தருளினதை அறிக.

7. இனி இத்தகைய ஒன்பது வகைப் பத்தியினாலும் முத்தி பெற்றார் பலராவர் அவர்களுள்—ஸ்ரீயப்பதியினது திவ்ய கதாஸ்ரவணம் பண்ணுதலினால் பரீக்ஷித் மகாராஜரும், 1. எமதருட்கடலாகிய எம்பிரானது அதிமானுஷ சேஷ்டித லீலாரஸ புஞ்சங்களைச்சதா க்கீர்த்தனம்பண்ணுதலினால் ஸ்ரீசுகப்பிரம்மரிஷியும், 2. அப்ராக்ருத

திவ்யமங்கள விக்ரஹ சௌந்தர்யத்தி லீடுபட்டுசர்வதா ஸ்மரணம் பண்ணுதலினால் ஸ்ரீபிரஹ்லாதரும், 3. அந்த சர்வேசுவரனது சேவனம்பண்ணுதலினால் ஸ்ரீமகாலக்ஷ்மியும், 4. ஸ்ரீபரமேசுவரனுக்கு அர்ச்சனம் பண்ணுதலினால் ப்ருது சக்ரவர்த்தியும், 5. பரமதயாளுவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு வந்தனம் பண்ணுதலினால் அக்ரூர ஸ்வாமியும், 6. ஜகத்ஸ்வரூபியாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு அடிமை செய்தலினால் ஸ்ரீஅனுமந்தாழ்வாரும், 7. வெண்ணெயுண்ட கண்ணபிரானுக்கு இடைவிடாத பரஸ்பர விஸ்வாசத்துடன் சிநேக விருத்திபண்ணினமையால் அர்ச்சுனனும், 8. அந்தபரமாத்மாவுக்கு தன்னுடைய சர்வ சொத்துடன் ஆத்ம சமர்ப்பணம் செய்தலினால் பலிச்சக்ரவர்த்தியும், முத்திபெற்றமை பிரசித்தம்.

8. இனி இத்தகைய பக்திசெய்தற்குரிய கடவுள் யாவரென ஆராயுமிடத்து உலகில் ஒவ்வொரு மனித வகுப்புள்ளும் அவரவர் கன்மானுசாரப்படி பலவேறு சமயங்கள் தோன்றி அவ்வச் "சமய கோடிகளெலாம் தம்தெய்வ மென்றெய்வ மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட" நின்ற கடவுள், நாமரூப பேதங்களால் பலதிறப்படினும், ஒரே விதமான பிரபஞ்சத்தோற்றநீக்கங்களை நோக்குமிடத்து, ஒரே கடவுளே அவ்வம்மதங்களினும் தோன்றி விளங்குகின்றாரென்பது யாரும் ஒப்பமுடிந்ததாம். அக்கடவுள் ஒருவரே ஒவ்வொருவரால் அறியும் அறிவின் ஏற்றத்தாழ்ச்சிக்கும், ஊழ்வினைப் பயனுக்கும், ஒத்தபடி தோன்றி நிற்பர். இதனையே

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே."

என நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளினர்.

ஆதலின் எச்சமயத்தவராயினும், தம்தம் சமயங்களின்உண்மைகளை உள்ளபடியறிந்து, அச்சமயக் கடவுளிடத்துப் பல வேறுவகைப்பத்திசெய்வார்களாயினும், உலகின் கண்ணுள்ள பல் வேறு நதித்திரள்

களும் பல்வேறு வழியிற்சென்று ஒரேகடலில் முடிவடைதல்போல, அவ்வாறே மெய்க்கடவுளையே சாருமென்பது தோன்ற,

"வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்று."

எனத் தாயுமானவர் குறிப்பித்திருக்கின்றனர்.

9. இங்ஙனம் தம் தம் மதங்களின் உண்மையை அறிந்து ஒழுகுதலுடன், புறமதங்களின் தன்மையையும் தத்துவங்களையும் தெரிந்துகொண்டு, இவற்றுள் மெய்ப்பாகம் இன்னதென அறிந்தொழுகும் ஆற்றல் இலரேனும், இவ்விஷயமான மதவாதங்களில் வீணே வாணாள் கழிக்காது,

"தர்க்கமிட்டுப் பாழாம் சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ."

என்றும் முன்னோர் மொழிந்து பரிதபித்த முதுமொழியைச் சிந்தித்து, அந்நல்வழியையும் எதிர்நோக்கி அவ்வச்சமயக் கடவுளிடத்திலேயே உண்மையாக அன்புடன் பத்தி செலுத்தலும் இழுக்கன்று. யாங்ஙனமெனில், எச்சமயங்களையும் உள்ளபடி ஆராயுமிடத்துக் கடவுள் ஒருவனே ஆவன் என்றும், அக்கடவுளை எச்சமயத்திருந்து எவ்விதமாய் வணங்கினும், அம்மெய்க்கடவுள் ஒருவனே அவ்வச்சமயங்களினும் தோன்றிப் பயனளிப்பனென்றும், பற்பல நூலும் வற்புறுத்துதலானென்க. என்னை

"தேருங்கால் தேவ னொருவனே என்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே எத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்."

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்."—எனச் சித்தியாரும்,
"எவ்வெவர் எப்படி நினைந்தார் அவ்வவர்க் கப்பொருளாய்"

என மற்றையோரும் கூறியிருப்பதன்றியும், பகவத்கீதையில் (யே யதாமாம் பிரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம், மமவர்த்த மானுவர் தந்தே மனுஷ்யாப்பார்த்த சர்வஸ꞉. இதன்பொருள்:) எவரெவ்வண்ணம் என்னைப்பாவிக்கிறார்களோ அவ்வண்ணமே யானவர்கட்கருள் செய்கின்றேன் எனவும், இத்யாதி வாக்யங்களினாலும் அறியக்கிடக்கின்றமையால், இங்ஙனம் எம்மதங்களினும் சம்மதனாய்ப் பூரணனாய் நிறைந்துள்ள கடவுள் ஒருவனே என்னும் பிரமஞானத்தை யடைந்து, "தெய்வமிகழேல்" என்றபடி எம்மதக் கடவுளையும் தூஷியாமல், புறமதச்சகிப்பும், யாவரிடத்தும் சகோதரபாவமும், உடையவராயிருந்து "உலகம் யாவையும் தாமுளவாக்கலும், நிலைநிறுத்தலும் நீக்கலுநீங்கலா, அலகிலா விளையாட் டுடையாரவர், தலைவரன்னவர்க்கேசரண்புகுந்து" அவ்விறைவனிடத்து மேற்கூறியவாறு நவவித பத்திகளும் புரிதல் வேண்டும்.

10. இங்ஙனம் நவவிதபத்தி முறையினை நூன்முகமாய்க் கண்டாலும், இவற்றின் உண்மைகளை ஆசிரியன் உணர்த்த, உணருந்தன்மைத்தாதலின் அவ்வாறுணர்த்தி

"அம்பொ னரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க
சம்பந்தங் காட்டித் தடைகாட்டி—இம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்
அவனன்றோ ஆசாரி யன்."

என்னும் ஒரு பெரியார் வாக்கின் இலக்கணமமைந்த நல்லாசிரியனை அடுத்துப் பத்திபுரிதலும், முத்திக்கு வழியாம். இதனையே,

"தீங்கேது மில்லாத் தேசிகன்றன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர்—ஓங்காரத்
தேரின்மே லேறிச் செழுங்கதிரி னூடுபோய்ச்
சேருவரே அந்தாமந் தான்"

எனப் பிள்ளையார் தெள்ளிதினுணர்த்தினமை காண்க. இனி அக்குருபத்தி முறையாவன: அங்கம், தானம், சத்பாவம், குற்றேவல், என நான்குவகையாகும். அவற்றுள் ஆசிரியனுக்கு அனுகூல விருத்தி புரிவது அங்கம், தனக்குரிய பொன்மணி முதலிய சர்வசொத்தையும்,

"பொருளும் உயிரும் உடம்பும் புகலும்
தெருளும் குணமும் செயலும்—அருள்புரிந்த
தன்னா ரியன்பொருட்டாச் சங்கற்பஞ் செய்பவர்கெஞ்
சென்னாளு மாலுக் கிடம்."

என எம் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் திருவாய்மலர்ந்தருளினதற் கிணங்க, ஆசிரியனுக் கற்பணம் செய்தல் தானம். அவ்வாசிரியனை,

"மானுடவ னென்னுங் குருவை மலர்மகள்கோன்
தானுகந்த கோல மூலோகமென்றும்—ஈனமதாய்
எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும்
நண்ணிடுவர் கீழாம் நரகு"

என்ற ஞானசாகரத் திருமொழியையும்,

"குருவுருவங் கொண்டிக் குவலயத்துட் டோன்றிப்
பருவரலை நீக்கும் பரன்"—என்னும் வள்ளலார் வாக்கினையும்
"அருள்பரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகியருளிய பெருமையைச்
சிறுமை யென்றிகழாதே"

என்ற மாணிக்கவாசகத்தையும் கருத்திற்கொண்டு, அவ்வாசிரியனை எச்சமயங்களினும் மானுட சரீரியென்றெண்ணாது, தேனார் கமலத் திருமாமகள் கணவன்றானே குருவாகித்தன்னருளால் மானிடர்க்காக இன்னிலத்தே தோன்றுதலால் "என்றபடி" பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்ததாய்ப் பாவித்தல் சத்பாவம். அவ்வாசிரியன்" சமுகத்திருந்து,

"ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானக் தருமம் தழைத்தகுரு—மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு வென்சிந்தை
கோயிலென வாழுங் குரு"

எனமதித்து அவ்வாசிரியன்,

"ஊசியிடா திட்டபணி செய்துகுரு பத்திகுறை விலராய்த் துரோகமின்றி, மாசிலராய் மனவாக்கு காயத்தால் குருவின் வாக்

கிய பாலனஞ் செய்யுமதிமானுமாயே" என்றபடி அவனுவந்த பணியைச் செய்தல் குற்றேவல் முடிக்கதது.

11. இங்ஙனம் ஆசிரியரிடத்துப்பக்திபுரிந்து, அவரருளால் ஈசுரனிடத்துப் பக்திபுரியும் முறைமை தெரிந்தும், அம்முறை தன் னறிவினிடத்தழுந்துவதற்குப் பன்முறையும் கேட்டுச் சிந்தித்துப் பழகவேண்டுமாதலால், அவ்வாசிரியரே யன்றி, ஏனைமெய்யடியார் களின் சகாயமும் வேண்டப்படுமாதலான், அவ்வடியார் பத்தியும் புரிதல் வேண்டும். அடியார் பக்தி புரிதலாவது: மெய்யடியாரைக் காணுந்தோறும் "மெய்யடியார்கள் தம்மீட்டம் கண்டிடக்கூடுமேல துகாணுங்கண்பெற்றபயனே" என்றும், "எம்பெருமான்றுள் தொழு வார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றுரே" என்றும் அவர் களை ஈசுவரனே என்னும் உறுதியோடு அன்புசெலுத்தி

"வியன்மூவுலகுபெறினும் போய்த் தானே தானே யானாலும்
புயல்மேகம்போல் திருமேனியம்மான் புனைபூங்கழலடிக் கீழ்ச்
செயமே யடிமைதலைநின்றுர் திருத்தாள்வணங்கி இம்மையே
பயனே இன்பம் யான்பெற்றதுறுமோ " என்றும்,

"அவனடியார் சிறுமனுசரா யென்னை ஆண்டார்" என்றும்,

ஸ்ரீ சடகோபர் தம்மனுபவத்தைக் கூறியமைபோல அவர்களி டத்துள்ளமனிதபாவனையை நிவர்த்தித்துத், தேவுமற்றறியாராய் அவர்கள் தேகபோஷணைகளுக்கு உண்டி ஆடை இடம் முதலியவை களை "அருள் கொண்டாடுமடியவரின்புற " உதவி ஆதரித்தல் வேண்டும்.

12. உலகில் ஒருவரிடத்து அன்பிருந்தால், அவரைச் சார்ந்த பந்துமித்திரர்களிடத்தும் அன்புசெலுத்தல் வழக்காதல்போல, ஈசு வரனிடத்து மெய்யன்புடையவராயிருந்தால் அவனருளைப் பெற்ற ஆசிரியனிடத்தும் அடியாரிடத்தும் அன்புடையவராகவே இருப் பர். அங்ஙனம் குருவினிடத்தும் அடியாரிடத்தும் அன்பில்லாமல், ஈசுவரினிடத்து அன்புடையேமெனக் கூறினும் கருதினும் அத்த கையோர்அன்புடையவருமல்லர்; அன்புடையவராக எண்ணப்படுப வருமல்லர். அம்மட்டோ, அவர்தமக்கும் அன்பில்லாதவரேயாவர்.

என்னை, மேற்கூறியவாறு அன்பின்மையினல் உண்மைப் பொருளை உணர்ந்து உறைத்து நில்லாதுபிறந்திறந்துழலும்பெருந்துன்பங்களை தமக்குத்தாமே வருவித்துக்கொள்ளுதலானென்க. இதனை

“ ஈசனுக் கன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்
தமக்கு மன்பில்லார்
பேசுவதென் னறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்விடுநீ
ஆசையொடும் அரனடியா ரடியாரை அடைந்திட்
டவர்கருமம் உன்கரும மாகச்செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறிபி னின்று கும்பிட்டுத்
தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.”

என்னும் சித்தியார் பாசுரத்தினினிது தெளிக. இவ்வாறு பத்தியினைத் தீவிரபசியுடையானொருவன் உணவுநாட்டமே யன்றிப் பிறிதொன்றையும் நாடாமை போலவும், சிகையில்நெருப்புப்பற்றப்பெற்றானொருவன் தண்ணீர் நாட்டமேயன்றிப் பிறிதொன்றையும் நாடாமை போலவும், பேரின்பம்ஒன்றையேபெற வெண்ணியஒருவன்பிரபஞ்சப் பற்றுகளாகிய “தந்தை தாய் மக்களே சுற்றமென்றுற்றவர் பற்றி நின்ற பந்தமார் வாழ்க்கையை நொந்து,” அவற்றில் பற்று வையாது, தான் நாடிய அந்தமில் பேரின்பம் ஒன்றையே கருதி, அது கூடுதற்கான முறைமையில் அவா மிக்கூர்ந்திருத்தலுக்குக் காதல் என்று பெயராம். இதனையே “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி” என்றார் என்னப்படும். அடைவின்றிக்கூறும் இக்காதல்மேல் பத்தி அன்பிற்குரைத் தாங்குரைத்துக்கொள்க.

13. இங்ஙனம் இதுகாறுங்கூறிபவாற்றால் பத்தி பிரபஞ்சத்தினிடத்தும் ஈசுவரனிடத்தும் செல்லும் முறைமையினல் இருதிறத்ததென்றும், அவற்றுள் ஈசுரனிடத்து வைக்கும் பத்தியே பத்தியெனப் பெயர் பெறுமென்றும், முத்திகாமிகள் பிரபஞ்சத்தினிடம் செலுத்தும் பத்தியை ஒழித்து ஈசுவரனிடத்தே பத்திபுரிதல் அவசிய மென்றும், இப்பத்தியே முத்திக்கு வித்தாமென்றும், இப்பத்தி அன்பு என்பன ஒருபொருட் சொல்லேயாயினும் விருத்தியோடு கூடியதுபத்தியென்றும், விருத்திஇறந்தநிலை அன்பென்றும், அப்பத்தி

எண்வகையும் அன்பு ஒன்றென்றும், இங்ஙவித பத்திநெறி நின்று முத்திபெற்றூர் பரீட்சித்தாதிபரென்றும், இப்பத்தி செய்தற்குரிய கடவுள் ஒருவரேயாகையால் எச்சமத்தாராயினும், அவ்வச்சமயக் கடவுளிடத்திலேயே பத்திபுரிதல் தவறுகாதென்றும்,இப்பத்தி வருவதற்கு ஆசிரியரும் அடியாரும் வேண்டப்படுதலால் அன்னோரிடத்தும் பத்திசெய்யவேண்டிய தவசியமென்றும், அன்னோரிடத்துப் பத்தியின்றி ஈசுவரனிடத்து மாத்திரம் பத்தியுடையேமென்றல் எவ்வாற்றானும் பொருந்தாதென்றும், இங்ஙனம் பத்தி யில்லாதவர் தமக்கும் அன்புடையவராகாரென்றும் நாட்டப்பெற்றது.

* ஆதலின் எல்லாம்வல்லஇறைவனிடத்திலும் ஆசிரியனிடத்தும் அடியாரிடத்தும் மெய்ப்பத்திபுரிந்து இன்புறுவோமாக.

கோபாலஸ்வாமி நாயுடு.

---

## நன்மொழி.

22. ஆத்மா நித்தியன் என்றும், நாம் நன்மையும் தீமையும் செய்ய வல்லமையுள்ளோமென்றும் அறிவாய். மேல் நோக்கிய நலம் சார்ந்த நெறிபற்றி ஒழுகுவாய். நீதியும ஞானமும் உன்னிடம் அமையும்படி முயலுவாய்.

23. தர்மநெறி இயங்கும் அளவும், இறைவன் உள்ளளவும், நன்முயற்சி வீணுகாது. பலனுள்ளதாகவே அமையும்.

24. இறைவன் உலகத்தை ஆளும் முறையில்,நாம் ஒவ்வொருவரும் ஓர் ஓர் உத்தியோகம் பெற்றவராக இருக்கின்றோம். அவ்வுத்தியோக உத்தரவாதத்தைத் தவிர்க்க ஒண்ணுது.

25. ஒரு நியமம் கொண்டால், அதைத் தளரவிடாதே. அதைச்செலுத்துவதில்,பொறுமை,நன்னம்பிக்கை, மனஒருமைஇம் மூன்றும் இன்றி அமையாததர்மங்கள்.

26 நன்மை, தீமை, புண்ணியம், பாபம்,பெருமை, சிறுமை இவைகளுக்குள் இருக்கின்றவித்தியாசத்தை எப்போதும் மனத்தின்கண் பதிப்பித்துக்கொள்.

---

* அன்பு என்பதைப்பற்றி, மதுரை பிரஹ்மஞான சபையின் 16-ம் லக்கமுள்ள துண்டுப் பத்திரிகையைப் பார்க்க. பத்திராதிபர்.

## பகவத்கீதையும் கருமயோகமும்.

—:o:—

[105-ம் பக்கத்தொடர்ச்சி.]

7. பிறருடைய நன்மையைக்கருதியும் தங்களுடைய நன்மையைக்கருதாமலும் செய்யப்படும் கர்மமானது யஞ்ஞமாகச்சொல்லத் தக்கது. அப்பேர்ப்பட்ட யஞ்ஞத்தைச் செய்யாதவனுக்கு இந்த லோகத்திலாவது சொர்க்க லோகங்களிலாவது பிரயோஜனம் கிடையாது.

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮 ॥

ஓ! குரு சிரேஷ்டா! யஞ்ஞம் செய்து மிஞ்சினதான அமிர்தத்தைப்புஜிக்கிறவர்கள் சாசுவதமான பிரம்ம பதத்தை அடைகிறவர்கள். யஞ்ஞம் செய்யாதவனுக்கு இந்த லோகமும் கிடையாது. வேறு லோகம் ஏது? கீதை IV. 31.

8. கரும யோகமானது இந்த மானுஷிய லோகத்திற்கு ஏற்றது. ஆகையால் இந்த யோகமானது தொன்றுதொட்டு வழங்கி வருகிறது.

𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

அழிவற்ற இந்த யோகத்தை நான் சூரியனுக்குச் சொன்னேன். சூரியன் மனுவுக்குச் சொன்னார். மனு இக்ஷுவாகுவுக்குச் சொன்னார். கீதை IV. 1.

இந்த யோகமானது மேற்கூறியபடி அழிவற்றதாகவும் புராதனகாலமுதல் அறிவிக்கப்பட்டதாகவும் இருக்கும்பக்ஷத்தில் அதை பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லக்காரணம் என்னவெனில், கால இபற்கையினால் அது மலினமடைந்து மனிதர்கள் அதனுடைய உண்மையை அறிந்துகொள்ளாமல் மயங்கி பலவிதமான பிரயத்தனங்களைச்செய்கிறார்கள்.

𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

ஓ! பரந்தப! இவ்விதம் பரம்பரையாய் வந்த இந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள் வெகுகாலமானதால் அந்த யோகமானது இந்த லோகத்தில் நஷ்டமாய்விட்டது. கீதை IV. 4.

இந்த யோகத்தினுடைய நஷ்டம் எவ்விதமாக ஏற்படுகின்றதென்று விசாரிக்கும்பக்ஷத்தில், காரியாம்சத்தில் குணமில்லாமல் வேஷதாரிகளாக கர்மங்கள் டம்பார்த்தமாகச் செய்வதில் பிரவர்த்தித்தலாம்.

(1). 𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌂𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌂𑌵𑌾𑌚𑌂𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌰𑌤𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌸𑍍𑌤𑍀𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥

(2). 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌰𑌾𑌃 𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌂।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑌹𑍁𑌲𑌾𑌂𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌗𑌤𑌿𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 ॥

(3). 𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂𑌤𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌂।
𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃𑌸𑌮𑌾𑌧𑍌𑌨𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇. ॥

ஓ! அர்ச்சுன! வேத வாதத்தில் பிரீதியுடையவர்களாயும் (சங்களுக்குத் தெரிந்தவைகளைக் காட்டிலும்) வேறு இல்லையென்று இருமாப்புக்கொண்டவர்களாயும், ஆசையுடையவர்களாயும், ஸ்வர்க்கத்தையே மேன்மையாகக்கொண்டவர்களுமான அவிவேகிகள், போகைசுவரியங்களை அடைவதற்காக, அநேக கருமபேதங்களையுரைப்பதும் ஜன்மத்தையும் கர்மபலத்தையும் கொடுப்பதுமான புஷ்பியாத மரம்போன்ற இந்த வார்த்தையைச் சொல்லுகிறார்கள். அந்த வார்த்தையினாலே மனசு கவரப்பட்டவர்களாய் போகைசுவரியங்களில் ஆசையுடையவர்களா யிருப்பவர்களுக்கு நிச்சய புத்தியானது மனசில் உண்டாகமாட்டாது. கீதை II-42-44.

9. கீதையானது உபதேசிக்கப்பட்ட காலத்திலேயே பேச்சுமிகுதியாயுள்ளவர்களும் கர்மயோகத்தில் பிரயத்தனம் குறைவுள்ளவர்களுமாய், சில மனிதர்கள் இருந்ததாக ஏற்படுகிறது. அவர்கள் இந்த பூலோகம் வாஸ்தவமாய் உளது என்று நினைத்ததுமல்லாமல், புவர்ஸ்வர்க்கலோகங்களும் வாஸ்தவமென்று நினைத்து மூன்று லோகங்களில் போகைசுவரியங்களை அடைவதற்காக முயன்றார்கள். அந்த வழிகளைக்கண்டிப்பதற்காகவும், கர்ம யோகத்தில் அர்ச்சுனனை

நிலைநிறுத்துவதற்காகவும் பகவான் மேற்சொல்லியபடி உபதேசித்திருக்கிறார். தற்காலத்திலோ சிலர்கள் வேதவாதமல்லாமல் சாதாரண பூலோகவிஷயங்களைச் சம்பந்தித்த வீண்பேச்சுக்களில் ரமிக்கிறவர்களாகவும், ஐம்புலன்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடிய விஷயங்களில் பிரவர்த்திக்கிறவர்களாகவும், பிறர்களுக்கு நன்மை விளைவிக்கக்கூடியவிஷயங்களைக் கவனிக்காதவர்களாயுமிருப்பவர்களைக்கண்டிப்பதற்காகஇக்காலத்திற்கு ஏற்ப, பகவான் சொன்னதாகவே நாம் வைத்துக்கொள்ளலாம். இந்தியாவில் தற்காலத்தில் பொது நன்மையைப்பயக்கக்கூடியசெய்கைகள் குறைவாகவும், அதைக் குறித்த பேச்சுவார்த்தைகள் மாத்திரம் மிகுதியாகவும் இருக்கின்றன. ஆகையால் இம்மாதிரியாய் பலனில்லாமல் புஷ்பிக்கும் மரங்களையொத்த பேச்சினால்மட்டும் பொது நன்மையை நாடும் மனிதர்களை செய்கைகளினால் பொது நன்மையை நாடும்படிசெய்து கருமயோகத்தில் நிலைநிறுத்துவதற்காக, பகவானுடைய வார்த்தைகள் உபயோகப்படக்கூடுமென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

10. பொது நன்மையைப் பயக்கும் கருமயோகம் எப்போது ஆரம்பிக்கப்படுகிறதோ, அப்பொழுதே பொதுநலம் உண்டாகிறது. மற்ற சுயநயம் பாராட்டும் காரியங்களை ஆரம்பித்து முடிவு வரைக்கும் கொண்டு செலுத்தாமற்போனால், ஆரம்பித்தபிரயத்தனம் வியர்த்தமாய்ப்போய்விடும். கருமயோகத்திலோ அப்படியல்ல. எவ்வளவுதூரம் அப்பியாஸம் ஏற்படுகிறதோ, அவ்வளவு தூரம் நன்மை உண்டாகக்கூடியது. ஏனென்றால், கர்மத்தைச்செய்வதானது ஸ்வர்க்கலோகத்துக்கு மனச்சங்கல்பம் எப்படியோ, புவர்லோகத்துக்கு விருப்பம் எப்படியோ, அதேமாதிரி இந்த பூலோகத்தின் இயல்பாகவிருக்கின்றது. ஆகையால், காமியமாக ஒவ்வொருவனும் பூலோகத்திற் செய்யும் கருமத்தை எவ்வளவுமட்டில் நிஷ்காமியமாகவும்பிறருக்கு நன்மை பயக்கவும் செய்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அப்பிரயத்தனம் வீண்போகாது. அப்படி ஆரம்பித்தலானது சீக்கிரமாகவோ அல்லது தாமஸமாகவோ மோக்ஷசாதனமாகும்.

நெஹாபிக்ரமநாஶொஸ்தி ப்ரத்யவாயொ நவித்யதெ ।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதெ மஹதொ பயாத் ॥

கருமயோகத்தை ஆரம்பம் செய்வது வீணுகாது. தோஷமானது இல்லே. இந்தக்கருமயோகத்தில் ஸ்வல்பம்கூட பெரிதானபயத்தினின்று விடுவிக்கும். கீதை II. 40.

இந்தக்கர்மயோகத்தைஅனுசரிக்கும் யோகிகள் அவர்கள் செய்யும் கர்மங்களை முழுமனத்துடன் செய்யவேண்டும். அப்படிச்செய்வதினுல் அவர்கள் காரியமானது அரைகுறை யில்லாமல் பூரண பிரயோஜனமுள்ளது.

காயெந மநஸா புத்த்யா கெவலைரிந்த்ரியைரபி ।
யொகிந꞉ கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயெ ॥

யோகிகள் பலாபேக்ஷையைவிட்டு மனஸ் சுத்திக்காக தேகத்திலேயும் மனத்திலேயும் புத்தியிலேயும் இந்திரியங்களைக் கருவிகளாகக் கொண்டும் கருமத்தைச் செய்கிருர்கள். கீதைVI-11.

இப்படிச் செய்யும் ரிஷிகள் கர்மத்தைச் செய்துகொண்டு சகல பிராணிகளுடைய நன்மையைக் கோருகிறவர்களாய் பிரம்ம நிர்வாணத்தையடைகிருர்கள்.

லபந்தெ ப்ரஹ்மநிர்வாணம்ருஷய꞉ க்ஷீணகல்மஷா꞉ ।
சிந்நத்வைதா யதாத்மாந꞉ ஸர்வபூதஹிதெ ரதா꞉ ॥

பாபத்தை நீக்கினவர்களாகவும், துவந்துவங்களற்றவர்களாகவும், தங்களை சுவாதீனப்படுத்திக் கொண்டவர்களாகவும், சகல பிராணிகளுடைய நன்மையைக் கோரினவர்களாகவும் இருக்கிற ரிஷிகள் பிரம்ம நிர்வாணத்தை அடைகிருர்கள். கீதைV-25.

கர்மங்களைச் செய்வதில் உள்ள சாமர்த்தியம் தான் கர்மயோகம் என்று சொல்லப்படுகிறது.

யொக꞉ கர்மஸு கௌஶலம் (கீதைII. 50.)

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு யோகமானது பிரதானமாய் அனுஷ்டிக்கத்தக்கது. தற்காலத்தில் இந்தியாவில் கர்மயோகமானது பிரதானமாய் அனுஷ்டிக்கத்தக்கது. ஜனங்களுடைய பொது நன்மைக்காக அநேக முயற்சிகளையுடைய கர்மங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் சுய நன்மையான பலத்தை இச்சிக்காமல், ஊக்கத்துடன் செய்யவேண்டியதற்கு பகவத் கீதையில் வேண்டிய உபதேசங்கள் உள்ளன. உலகத்துக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும், உலகத்தினுடைய க்ஷேமத்திற்கும் நாம் முயற்சிக்கவேண்டுவதில்லை என்றும், சாதாரணமாய் சொற்ப வேதாந்தம் படித்த ஜனங்கள் சொல்லுகின்றார்கள். இது பகவான் உபதேசித்த கீதையின் சித்தாந்தத்திற்கு முற்றும் மாறாய் இருக்கின்றது. கீதா சாஸ்திரத்தின் முடிவு, கர்மயோகமே. இடை இடையில், பல ஞானவிஷயங்களை பகவான்பிரஸ்தாபித்திருக்கலாம், இருக்கிறார். அவருடைய அபிப்பிராயம், எல்லாரும் பொதுவாய் கர்மயோகத்தைக் கைப்பற்றி ஒழுகிக் கடைத்தேறற் பாலது என்பதேயாம். “உத்திஷ்டாரொஹவ”

அ. ரங்கஸ்வாமி அய்யர்.

---

## நன்மொழி.

27. இருவர் பேச, அறுவர் சம்பந்தம் ஏற்படுகின்றது. சந்திரன் சோமன் இருவர் சம்பாஷணையில்,

(1) சுயமாகவுள்ள சந்திரன் சோமன், ஆக இருவர்.

(2) அவன் அவன் நினைப்பில் உள்ள சந்திரன், சோமன் ஆகஇருவர்.

(3) சந்திரன் நினைப்பில் உள்ள சோமன், சோமன் நினைப்பில் உள்ள—சந்திரன்—ஆக இருவர்.

இம்மூன்றுபாவங்களில் ஆறுபெயர் உள்ளார் என்றறிக.

---

## சமாசாரம்.

### எனங்குடியில் தஞ்சாவூர் பிரஹ்மஞான கிளைச்சபைகளின்கூட்டம்.

1910ஞு செப்டம்பர்மீ 17உ 18உகளில் தஞ்சை ஜில்லா பிரஹ்மஞான கிளைச்சபைகளின் 7-வதுகூட்டம் நன்னிலம்ரயில்வேஸ்டேஷனுக்கு 2 மயில் கிழக்கேயுள்ள எனங்குடியில் கூடியது.

தஞ்சை ஜில்லாவிலுள்ள 30 கிளைச்சபைகளில் கோவில் கந்தங்குடி, பட்டுக்கோட்டை, இந்த இரண்டு இடங்கள் நீங்கலாக மற்ற 28 கிளைச்சபைகளிலிருந்தும் இதர ஜில்லாக்களிலுள்ள 7, 8° கிளைச்சபைகளிலிருந்தும் மொத்தம் 180-க்கு மேற்பட்ட மெம்பர்களும் 320-க்கு மேற்பட்ட அபிமானிகளும் வந்திருந்தார்கள். சுற்றுப்பக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். கோவில்கந்தங்குடியிலிருந்தும் பட்டுக்கோட்டையிலிருந்தும் இவ்வளவு சமீபத்தில் நடந்தேறிய கான்பரென்ஸுக்கு பிரதிநிதிகள் வராமல் இருந்தது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. பஞ்சமர்கள் வெகுபேர்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. சுமார் ரூ 500வரை செலவானது. எனங்குடி பிராஞ்சு மெம்பர்களுடைய கூட்டுச் செலவில் கான்பரென்ஸ் நடந்தேறிற்று. கான்பரென்ஸ் மிக்க திருப்திகரமாய் நடந்தேறிற்று. அடுத்த 8-வது ஸெஷன் கும்பகோணத்தில் அடுத்த 1911ஞு பிப்ரவரிமீ கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அக்கிராசனாதிபதியாக மகா-ா-ா-ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார்அவர்கள் இருப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். இதுஎல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதே. அடியில் விவரித்தபடி உபந்நியாசங்கள் நடந்தன.

17உ சனிக்கிழமை

கான்பரென்ஸ் காரியதரிசி உபக்கிரமம்:

எனங்குடி பிராஞ்சுபிரசிடெண்டு உபசரணை:

கான்பரென்ஸ் அக்கிராசனாதிபதி மகா-ா-ா-ஸ்ரீ A. நீலகண்டசாஸ்திரியார் அவர்களின் ஆரம்பஉபந்நியாசம், ஹிந்து மதமும் தியாஸபியும்:

மகா-ா-ா ஸ்ரீ T. S. லக்ஷ்மிநாராயணய்யர் அவர்கள் புராணங்களின் தத்வார்த்தம்:

,, ப. நாராயணய்யர் அவர்கள் மோனமென்பது ஞானவரம்பு

18உ ஞாயற்றுக்கிழமை

மகா-ா-ா-ஸ்ரீ விழிப்புரம் T. S, சங்கரநாராயணய்யர் அவர்கள் தியாஸபியும் ஞானமார்க்கமும்:

,, T. S. லக்ஷ்மிநாராயணய்யர் அவர்கள் அப்பியாஸயோகம்

,, ப. நாராயணய்யர் அவர்கள் அன்பு:

,, A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் (அக்கிராசனாதிபதி) ஞானமார்க்கப்படிகள்

## வியாதியை உண்டுபண்ணும் விஷக்கிருமிகளை அழிக்கும் ஓர் அற்புத விளக்து:—

சூரியனுடையரஸ்மியும் மின்சாரவெளிச்சத்தின்ரஸ்மியும் மூன்றுவிதமானசக்திகள்உடையன. 1. அக்கினிசக்தி. உஷ்ணம்பண்ணும்சக்தி(2) ஒளி அல்லது பிரகாசசக்தி. (3) ரஸாயனசக்தி. அதாவது வஸ்துக்களைச்சேர்க்கவும் பிரிக்கவும்கூடியசக்தி. சூரியனுடையரஸ்மியை, முக்கோணவடிவுள்ள ஸ்படிகம் அல்லது கண்ணாடிமூலமாய்ச் செல்லும்படியாகச்செய்தால், ஆகாசத்தில் தோன்றும் வானவில்போல ஒன்றின்பின் ஒன்றாய் அடியிற்கண்ட வரிசைக் கிரமப்படி தொடர்பான ஒருகாட்சிஏற்படும். சிவப்பு (red), ஆரஞ்சுவர்ணம் (orange), மஞ்சள் (yellow), பச்சை (green), நீலம் (blue), ஆழ்ந்த நீலம் (indigo), இந்திரநீலம் (violet), சிவப்புவர்ணத்திற்குப் புறம்பாகவும் இந்திர நீலத்திற்குப் புறம்பாகவும் கண்ணுக்குத்தோன்றாத ரஸ்மிகள் இருக்கின்றன. முன்னது அக்கினி அம்சமான ரஸ்மிகள். பின்னது ரஸாயனஅம்சரஸ்மிகள். இந்தரஸ்மிகளைமாத்திரம்பிரிக்கக்கூடியஒருயந்திரத்தைஐக்கியநாட்டில் (U. S. A.) நியூயார்க் (New York)நகரின் வாசியாகிய, Cooper Heiuitt 1892-ஹு கண்டுபிடித்தார். அதில் சிலகுறை இருந்து வேறு இருவர் அக்குறையை நிவிர்த்தி பண்ணி இருக்கிறார்கள். இது ஒரு விளக்குப்போன்ற இயந்திரம். இது மின்சாரத்தினால் அமைந்த ஒருவித விளக்கு. வியாதிகளை யுண்டுபண்ணக்கூடிய விஷமான நுண்ணிய கிருமிகள் (Malevolent bacteria) பலுகிப்பெருகாமல் தடுக்கவும், சாகும்படியாகவும் செய்யவும், இந்தவிளக்குக்கு யோக்கியதை உண்டு. இரண்டடி சதுரம், இரண்டடி ஆழம் உள்ள ஜலத்தில் ஷை விளக்கை அழுத்தினால் வெகு சீக்கிரத்தில் வியாதி உண்டுபண்ணக்கூடிய விஷக்கிருமிகள் எல்லாம் மடிந்துபோம். ஐந்துபெயர் அடங்கிய ஒரு குடும்பத்திற்குப் போதுமான ஜலத்தை ஒரு அணாச்செலவில் சுத்தம் பண்ணிக் கொள்ளலாம். நம் தேசத்தில், பிளேக் வியாதி நடமாடுகிற ஊர்களில் இந்த இயந்திரம் மிகவும் உபயோகமாக இருக்கும். இதனைச்சர்க்காரில் வரவழைத்து, இதன்பிரயோஜனத்தை ஜனங்களுக்குத்தெளிவாக அறிவிப்பார்களானால்நலமாயிருக்கும்.

## ஆகாசகமனம்.

முற்காலத்தில்பலவிதமானயோகமந்த்ரசித்திமுறைகளால், ஆகாயத்தில் யாத்திரை செய்யும் தகைமையை நம் முன்னோர்கள் பெற்றிருந்தார்களென்றும், யுத்தகாலங்களில் அச்சக்திகளின் ஆதரவால் ஆச்சரியமான வேலைகள் செய்தார்கள் என்றும், இராமாயண பாரத புராணங்கள் வாசிப்பதினால் தெரியவருகிறது. இக்காலத்தில் சிரமசாத்தியமான அவ்வித சித்திமுறைகளை அனுஷ்டியாமல், ஸ்தூலமான பிரகிருதி திரவியங்களின் சக்திகளைப்

புத்திசாலித்தனமாய்ப் பிரயோகித்து ஆகாசத்தில் புகைக்கூடு முதலான யந்திரங்களையும், ஒவ்வொருவனும் தனித்தனியாய்ப் பறக்கும்படியான யந்திரங்களையும், மேனாட்டார்கள் இப்போது கண்டுபிடித்து இருக்கிறார்கள். பலபட்டணங்களில் அநேகர் அநுஷ்டானத்தில் இதைக்கொண்டுவந்திருக்கிறார்கள். பறக்கும்யந்திரத்துக்கு Aero Plane என்று பெயர். யுத்தத்தில் இவ்வியந்திரத்தை உபயோகிக்கும்படியாகப் பலவிதமான உபாயங்கள் அமைந்த ஆகாயக்கப்பல்கள் உண்டுபண்ணிக்கொண்டு வருகிறார்கள். இவ்விதம் மேல்நாட்டு ராஜாங்கத்தார்கள் எல்லாரும் இவ்விதம் ஆகாயக்கப்பல்களை உண்டுபண்ணிக்கொள்வார்களே யாகில், உலகத்தில் யுத்தம் நேரிடுங்கால் ரணகளம் மகா கொடுமையாகவும், பயங்கரமான யமகளமாகவும் முடியும். இந்த விபரீத சம்பவத்தை மேல்நாட்டு அறிஞர்கள் சிந்திப்பார்களேயாகில், போர் குன்றும். ஜன சமூகங்களில் சமாதானம் நேரிடும். தீமையிலும் நன்மை உண்டு. விஷத்தினின்றும் அமிர்தம் கடையலாம்.

மின்மினிப்பூச்சியினின்று நாம் தெரிந்துகொள்ளவேண்டியவிஷயம்:—எறும்பினிடத்திற் போய் அதின் வாழ்நாள் முறையைத் தெரிந்துகொண்டு நீ ஞானம் பெறுவாயென்று வழக்கமாய்ச் சொல்லுகிறது உண்டு. எறும்பினுடைய மூளை கடுகைவிட எத்தனையோ பங்கு நுண்ணியதாக இருந்தும், அதன் காரியங்களைப் பார்த்தால் அதன் புத்திநுட்பமும் திட்பமும் மிக வியக்கத்தக்கது. அக்கூட்டத்தாரின் நாகரீகமான அரசாட்சி முறை ஒன்றே தக்க சான்றும். பிரகாசத்தை உண்டுபண்ணும்வழிமுறையில், எவ்வளவோ புதிதுபுதிதானபுத்திநுட்பத்தாலமையப்பெற்ற இயந்திரங்களை மனிதன் கண்டுபிடித்து இருந்தும், வஸ்துக்களை எரிப்பதால் அல்லது வேறுவிதமான பரிணாமத்திற்குட்படுத்துவதினால் அவ்வஸ்துவிலுள்ள பூர்ணசக்தியையும் பிரகாசம் அல்லது ஒளியாக, ஒருபாகமும் கூடச் சிதறாமலும் உஷ்ணம் உண்டாகாமலும், பரிணமித்து விகாசம் பெறும்படியாகச் செய்யமுடியவில்லை. 100-க்கு 60, 65 பாகம்தான் ஒளியாக வெளிப்படுகிறது. மீதபாகம் அக்கினி அம்சமாக வெளிப்படுகிறது. மின்மினியோ என்றால் 100க்கு 99 பாகத்திற்குமேலாக ஒளியாக வெளிப்படும்படியாயும் மிகவும் நுண்ணியபாகம் அக்கினி அம்சமாக வெளிப்படும்படியாயும் உள்ளதகைமையைப்பெற்றிருக்கிறது. இஃதுஓர் அற்புதமான சக்தி. அற்பமான ஜந்துக்களாக இருப்பினும், எத்தனையோ அற்புதமான விஷயங்களை அவைகளினின்றும் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். புத்திபூர்வமாய் ஆராயுங்கால், ஈசுவரனது சக்தி, பெரிதில் எவ்வளவு இருக்கின்றதோ, அவ்வளவே சிறிதிலும் இருக்கின்றதைக் காணலாம். "சிறியவாகப் பெரியோன்" என்றார் மாணிக்கவாசகர்.

## பௌத்தமதவிஷயம்.

1. சென்ற வைகாசிமீ பௌர்ணமையுடன் கௌதம புத்தர் நிர்வாணம்பெற்று 2499 வருஷங்கள் ஆயின. வருகிறவருஷத்துடன் 2500 வருஷமாகின்றது. (2) புத்தரின் அஸ்தி ஒரு தங்கக் கலசத்தில் வைக்கப்பெற்று இந்தியாவின் மேற்கு எல்லை நகரான புருஷபுரம் என்ற பிஷாவரில் பூமியின்கீழ் புதைக்கப்பட்டு, (Archaelogical Department) பூர்வீகச் சின்னங்களை ஆராய்ச்சிசெய்யும் டிபார்டுமெண்டாரால் கண்டுபிடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு இந்திய கவர்னர்ஜனரல் கனம்பொருந்திய மிண்டோ அவர்களால் பர்மா தேசத்தில் முக்கியமான பட்டணமாகிய மண்டேலே என்னும் நகரத்தில் பந்தோபஸ்தாய் இருக்கும்படியாக அவ்வூரிலுள்ள பௌத்த சந்நியாஸிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

(3) பௌத்த பிக்ஷுக்கள் கோலம்பஸ் அமேரிக்காவைக்கண்டுபிடிக்குமுன் சீன தேசம் மூலமாக வடஅமெரிக்காதேசம்சென்று மெக்ஸிகோ முதலான இடங்களில் பௌத்த மதத்தைப் பரவச்செய்தார்களென்று தெரியவருகிறது. மெக்ஸிகோவில் சில பட்டணங்களின் பேர் பௌத்தமதம் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. ஹாடிமாலா என்பது கௌதம ஆலயம் என்பதின் மருவாகவும், ஸ்கோமான் என்றது சக்யமுனியன் என்பதின் மருவாகவும், சகபுராஸ் என்றது சக்யபுர என்றதின் மருவாகவும், இருக்கின்றமையை ஊகிக்கலாம். மெக்ஸிகோவின் ஜனங்களுடைய குருக்களை "லேமாஸ்" என்று சொல்லுகிறார்கள். மெக்ஸிகோவில் பூர்வீககோவில்கள் கட்டிடங்கள் முதலானவைகளின் இடிந்து தகர்ந்துபோனவைகளைத் தோண்டியெடுத்துப் பார்க்கிறதில், சில ஹிந்து மத விக்கிரகங்களும் அகப்பட்டதாம். அவைகளில் கணபதி விக்கிரகம் முக்கியமானது!

4. கி. பி. 836-ம் வருஷத்தில் இந்தியா தேசத்தினின்று பூதிசேநன் என்ற ஒரு பிராமண பௌத்தன் சீனவுக்கும் ஜப்பானுக்கும் போனான். சீன தேசத்தில் அப்போது இருந்த சக்கரவர்த்தி அவனை அன்பு ஆதரவுடன் நடத்தினார். சீனவிலேயே இருந்து இறந்தான். அவனுடைய சமாதை இன்னும் சீனதேசத்தில் காணலாம். இந்த பூதிசேனனால் சமஸ்கிருதத்தை அநுசரித்து 5,அக்ஷரமுள்ளதாக ஜப்பான் பாஷையின் நெடுங்கணக்கு ஏற்படுத்தப்பட்டது. பௌத்தமத சம்பந்தமான சமஸ்கிருத புஸ்தகங்கள் ஏராளமானவை சீனபாஷையில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அதனால் அநேக சம்ஸ்கிருத வார்த்தைகள் சைன பாஷையில் கலந்திருக்கின்றன. பௌத்தமதம் சீனவுக்குப் போனகாலத்தில் அநேக ஹிந்துக்கள் சீனவுக்குப் போயிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

5. பௌத்தமதம் உலகமெங்கும் பரவ ஆரம்பித்திருக்கிறது. ஐரோப்பாகண்டத்திலும், அமெரிக்கா கண்டத்திலும், ஒவ்வொரு முக்கியமான நாடுகளில், ஓர் ஓர் பௌத்தசபை ஏற்பட்டுள்ளது. பௌத்தமதத்தின் கிரந்தங்கள் அதிகமாக பலி என்ற ஸமஸ்கிருதத்தினின்று திரிந்த பிராகிருத பாஷையில் உள்ளன. அவைகள் பெரும்பான்மையானவைகள் ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

6. வருகிற வருஷத்தில், உலகிலுள்ள பௌத்தர்களின் மஹாசபைக் கூடப்போகிறது.

7. மைத்திரேயபுத்தர் என்பவர் இனி அவதாரமாவார்.

(நோரேந்திரநாத்ஸேன்.)

# சில அருமையான புத்தகங்கள்.

திருக்குற்றாலத்தலபுராணம்:—திருநெல்வேலிஜில்லா மேலகரம் ஸ்ரீ திரிகூடராஜப்பக் கவிராசமூர்த்திகளியற்றியது. சொன்னயம் பொருணயம் அணிநயம் முதலியனெல்லாநயமுங்கொண்டது. உ௦௯உ கவிகளுள்ளது. ஒவ்வொருகவிகட்கும் அரும்பதவுரையுடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிட்டு நயமான கலிக்கோ பயிண்டு செய்யப்பெற்றது. 55 பாரம் 440 பக்கம்கொண்டது. நூலாசிரியர் சரித்திரமும் நூலிலுள்ள பற்பலவிசேடங்களும் முகவுரையில் நன்கு விளக்கப்பெற்று இப்போதுதான் வெளிவந்துளது. விலை ரூ. 1-8-0.

குலோத்துங்கசோழன் கோவை:—இதுவரை வெளிவராத இக் கோவையானது ஆழ்ந்த பொருள்வளமுடையது. அகப்பொருளில க்கணத்துக்குச் சிறந்தஇலக்கியமாயது. இந்நூலுக்கு அரும்பதவுரையும் துறைவிளக்கமும் விசேடக்குறிப்புக்களுமெழுதி நல்ல கனமான கடிதத்தில் அச்சிட்டு நயம் கிலீட்டுடன் கலிக்கோ பயிண்டுசெய்யப் பெற்றது. இதன் விலை ரூ. 1—0—0.

கன்னியாகுமரித்தலபுராணம்:—கோட்டாற்று வணிகப்பிரபுக்கள் வேண்டிக்கொண்டவாறு ஸ்ரீ சங்கரநாவலர் செய்தருளிய இவ்வரிய பழையபுராணம் 856 கவிகளையுடையது. ஒவ்வொரு சருக்க முடிவிலும் இனிய வசனமும் சேர்த்து நன்முக அச்சிட்டுப்பயிண்டு செய்யப்பெற்றது. இதன் விலை ரூ. 1—0—0.

இம்மூன்று சிறந்த நூல்களும் மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர் ஸ்ரீமத். மு. ரா. அருணசலக்கவிராயரவர்களால் பரிசோதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றன.

வேண்டுபவர்கள் மதுரை வடக்காவணிமூலவீதி விவேகபாநு அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம். இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,

வித்தியாபாநுப் பத்திராதிபர்,

விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

# புத்தக வரவு.

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் 1899௵ டிசம்பர்மாசத்தில் அருமைபெருமைதங்கிய நான்கு உபந்நியாசங்கள், ஈசுவர அவதாரங்களைப்பற்றி, ஆங்கிலபாஷையில் செய்திருந்தார்கள். அவைகள் புஸ்தகரூபமாக 1900வருஷத்தில் வெளிவந்தன. அக்காலத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்களின் மனத்தில் உற்சாகத்தைத் தந்து மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணின. தமிழ்ப்பாஷையில்வெளிவராமையால் ஏனையருக்கு அவை பயன்படாமலிருந்தன. அவ்வுபந்நியாசங்கள் நம் நாட்டார் யாவரும் எளிதில் அறியும் வண்ணம் இப்போதுதான் தமிழ்நடையில் மொழிபெயர்க்கப்பெற்று புஸ்தகரூபமாக அச்சில் வெளிவந்திருக்கின்றன. இப்புண்ணியகாரியத்தைச்செய்தவர் மாயூரவாஸியாகிய பிரஹ்மஸ்ரீ எஸ். ராமஸ்வாமி ஐயர் அவர்கள் என்பார். இம்மொழிபெயர்ப்பு, மூலத்தைச்சார்ந்தே நிகழினும், சொற்சுவை நன்றாயுள்ளது. இனிய செந்தமிழில் இதுசெய்துள்ளது. மூலகிரந்தத்தை வாசிக்கின்றவர் அனுபவிக்கக்கூடிய பொருட்சுவையையும், சொற்சுவையையும், ஆங்கிலம் தெரியாதாரும் அனுபவிக்கும்படியாக செவ்வையாய் இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழ்நடை மாத்திரம் சற்று கடினமாகவே இருக்கின்றது. சாதாரணவார்த்தைகளின் பிரயோகமாகவிருந்தால் இன்னும் நலமாக இருக்கும். இப்புஸ்தகம் நம்நாட்டில் நன்றாய்ப் பரவுமாகில், அவதாரங்களின் உண்மை நம்மவர் தெளிவாய் அறிந்துகொள்ளுவர். அப்படி அறிவாராகில், நம்முடைய சநாதனதர்மமாகிய ஆரியமதத்தில் பலவாறான சமயமுறைகளிருக்கின்றனவால், அவைகளுக்குள் சிற்சில காலங்களில் அச்சமயவாதிகள் செய்யும் தர்க்கப்போர்களின்கண் உண்டாகும்விஷமவாதங்களும், துவேஷங்களும், குறைவுபடும், நீங்கும், என்பதில் சந்தேகமில்லை. அவதாரங்களைப்பற்றிய உண்மைகளை திரட்டி ஒருங்கே சேர்த்து, நேர்மையாயும் நடுவின்றி வழுவாமலும், நம்மான்றோர் அபிப்பிராயங்களை அனுசரித்தும்தெளிவுபடுத்தியும், இவ்வுபந்நியாசங்கள் செய்யப்பட்டமையால், இவைகளைப்படிப்போர்ஈசுவரபக்தியும்,ஜீவகாருண்யமும்,மதவைரித்தன்மை நீக்கமும் பெறுவார்கள் என்பது நாம் சொல்லித்தெரியவேண்டுவதில்லை. இது தஞ்சைமாநகரிலுள்ள மணியன் கம்பெனி அச்சு இயந்திரசாலையில் நன்றாய் அச்சியற்றி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 8 தான். நம்மவர் யாவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசிக்கவேண்டும். பிரஹ்மஞானசபையைச் சார்ந்தவர் இதைப்பரவச்செய்யவேண்டிய ஊக்கம் எடுக்கற்பாலது.

பத்திராதிபர்.

## பூர்ணசந்திரோதய விளம்பரம்.

—0—

# சந்தா விவரம்.

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

# விளம்பர விகிதம்.

| விளம்பர விகிதம், ஒருபக்கத்துக்கு. | | அரைப்பக்கத்துக்கு. | |
|---|---|---|---|
| மாசத்திற்கு | ரூ. 2—8—0 | மாசத்திற்கு | ரூ. 1—8—0 |
| 3 மாசத்திற்கு | ,, 6—0—0 | 3 மாதத்திற்கு | ,, 3—8—0 |
| 6 ஷை | ,, 11—0—0 | 6 ஷை | ,, 6—0—0 |
| 1 வருஷத்துக்கு | ,, 18—0—0 | 1 வருஷத்துக்கு | ,, 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்.

ப. நாராயண அய்யர்,

பத்திராதிபர், 'பூர்ணசந்திரோதயம்,' மதுரை.

---

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் விலை அணா 6
மனிதன் வம்சாவளியின் உண்மை ... ... ,, 8
ஹிந்துமத தூஷணபரிகாரம் ... ... ,, 4
Avayar's Yoga Aphorisms in English ... Price 8 Annas

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.

அல்லது

Manager, Theosophist Office, Adayar, Madras. S.

---

திருக்குறள். பரிமேலழகருரையுடன் பாக்கட்சைஸ். புதிய பதிப்பு. உயர்ந்த கலிக்கோபயிண்டு. அரிய பலசீர்திருத்தங்களுடன் அழகாக நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்றது. விலை [illegible] ஒன்று (தபாற்கூலி வேறு.) வேண்டுவோர் மதுரை விவேகபாநு [illegible]பத்திரசாலையிற் பெறலாம்.